# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035

தொலைபேசி எண். 044 - 2951 5590


**ஆணை நாள் - 03.06.2025**

**முன்னிலை**

## திரு முகம்மது ஷகீல் அஃதர், இகாப (ஓய்வு)
## மாநில தலைமை தகவல் ஆணையர்

*****

## வழக்கு எண். SA 10832/SCIC/2023 & CP 1811/SCIC/2023

THIRU SURESH REDDY — மேல்முறையீட்டாளர்
NO.132/4, DHASARAPALLI VILLAGE
POONAPALLI PANCHAYAT
HOSUR TALUK, KRISHNAGIRI-635 114

//எதிர்//

பொதுத் தகவல் அலுவலர்/
கண்காணிப்பாளர் ....... பொதுஅதிகார அமைப்பு
மாவட்ட நில அளவை அலுவலகம்
கிருஷ்ணகிரி.

**ஆணை**

**(1) SA 10832/SCIC/2023:**

| | | |
|---|---|---|
| 1. | மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு | 08.04.2023 |
| 2. | பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 08.05.2023 |
| 3. | முதல் மேல்முறையீட்டு மனு | 12.05.2023 |
| 4. | மேல்முறையீட்டு அலுவலரின் பதில் | 12.06.2023 |
| 5. | இரண்டாம் மேல்முறையீட்டு மனு | 15.06.2023 |
| 6. | பின்னர் பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 03.03.2025 |
| 7. | மனுதாரரின் ஆட்சேபணை மனு | 16.04.2025 |

1. மனுதாரர், The Public Information Officer / Assistant Director of Survey, Collector Office, Krishnagiri அவர்களுக்கு அனுப்பிய மனுவில், கீழ்க்கண்டவாறு கோரியுள்ளார், "I have filed Petition in CM Cell Portal (TN/REV/KGI/PORTAL/26/NOV22/4668718) The Thasildar of Hosur has created Roc No.149-2021-R Dt.24/05/2023 and Letter forwarded to AD Survey Krishnagiri to mark road for Dhasarapalli village in revenue records please provide me what action has been taken on these regards. And petition filed to the Prime Minister PMOPG/E/2023/0063488 Dt.23/03/2023 for the same to mark road for Dhasarapalli village in Revenue records the same has been sent to District Collector, Krishnagiri, please provide me what action has been taken on these regards" என்பன போன்று 4 (நான்கு) இனங்களில் தகவல்களை வழங்கக் கோரியுள்ளார்.

**(2) CP 1811/SCIC/2023:**

| | | |
|---|---|---|
| 1. | மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு | 08.04.2023 |
| 2. | பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 08.05.2023 |
| 3. | முதல் மேல்முறையீட்டு மனு | 11.05.2023 |
| 4. | மனுதாரரின் புகார் மனு | 12.05.2023 |
| 5. | மேல்முறையீட்டு அலுவலரின் பதில் | 12.06.2023 |
| 6. | பின்னர் பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 08.11.2024 |
| 7. | மனுதாரரின் ஆட்சேபணை மனு | 28.04.2024 |

2. மனுதாரர், The Public Information Officer / Assistant Director of Survey, Collector Office, Krishnagiri அவர்களுக்கு அனுப்பிய மனுவில், கீழ்க்கண்டவாறு கோரியுள்ளார், "I have filed Petition in CM Cell Portal (TN/REV/KGI/PORTAL/26/NOV22/4668718) The Thasildar of Hosur has created Roc No.149-2021-R Dt.24/05/2023 and Letter forwarded to AD Survey Krishnagiri to mark road for Dhasarapalli village in revenue records please provide me what action has been taken on these regards. And petition filed to the Prime Minister PMOPG/E/2023/0063488 Dt.23/03/2023 for the same to mark road for Dhasarapalli village in Revenue records the same has been sent to District Collector, Krishnagiri, please provide me what action has been taken on these regards" என்பன போன்று 4 (நான்கு) இனங்களில் தகவல்களை வழங்கக் கோரியுள்ளார்.

**3. மேற்குறிப்பிட்ட SA 10832/SCIC/2023 & CP 1811/SCIC/2023 ஆகிய இரண்டிலும் மனுதாரர் ஒரே பொருண்மை கொண்ட தகவலையே கோரியுள்ளதால், அவையிரண்டையும் ஒருங்கியலாக விசாரணை செய்ய ஆணையம் முடிவு செய்தது. இன்றைய (03/06/2025) விசாரணைக்கு மனுதாரர் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பில் திரு சி.சக்திவேல், தலைமை வரைவாளர், மாவட்ட நில அளவை அலுவலகம், கிருஷ்ணகிரி அவர்கள் ஆஜராகி மனுதாரருக்கு 08/05/2023, 12/06/2023, மற்றும் 08/11/2024 ஆகிய தேதிகளிட்ட கடிதங்கள் வாயிலாக தகவல்களை அனுப்பியுள்ளதாகத் தெரிவித்தார். மனுதாரர், தனக்கு அத்தகவல்கள் கிடைக்கப் பெற்றதாகவும், ஆனால் அவை சரியானதல்ல என்றார். பொதுத் தகவல் அலுவலரால் வழங்கப்பட்ட தகவல்கள் ஆணையத்தால் பரிசீலிக்கப்பட்டன. இரு தரப்பினரின் வாதுரைகளும் கேட்கப்பட்டன. அதில் இனம்-1-க்கான தகவல் ஆவணங்களின்படியான, உரிய தகவல் வழங்கப்பட்டுள்ளது என ஆணையம் பதிவு செய்து ஏற்கிறது. இனம்-2-ஐ பொறுத்த வரையில், பொதுத் தகவல் அலுவலர் தெரிவிக்கையில், இனம்-1-க்கான**

தகவலான 50 கிராமங்களுக்கான விவரங்கள் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். ஆனால் மனுதாரர், அதனை ஒப்புக்கொள்ளாமல். ஒரு கிராமத்தின் விவரங்களைக் கூட பொதுத் தகவல் அலுவலர் தெரிவித்துள்ளவாறு பதிவேற்றம் செய்யப்படவில்லை என்றார். அதற்கு, பொதுத் தகவல் அலுவலர், 50 கிராமங்களுக்கான விவரங்கள் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது என மீண்டும் தெரிவித்தார். மனுதாரர், 2022ம் ஆண்டைய உத்தரவின்படியான விவரங்களாக அது இருக்கலாம் என்றும் ஆனால் இயக்குநர், நில அளவை மற்றும் நிலவரித் திட்டம், சென்னை அவர்கள் 20/03/2022 தேதியிட்டு உதவி இயக்குநர், நில அளவை மற்றும் நில ஆவணங்கள் துறை, கிருஷ்ணகிரி அவர்களுக்கு அனுப்பிய சுற்றறிக்கையின்படி கிராம விவரங்கள் முற்றிலுமாக பதிவேற்றம் செய்யப்படவில்லை எனக் கூறினார்.

4. எனவே, உதவி இயக்குநர், நில அளவை மற்றும் நில ஆவணங்கள் துறை, கிருஷ்ணகிரி அவர்கள் மேற்குறிப்பிட்ட விவரங்கள் பதிவேற்றம் செய்யப்பட்டிருக்கிறதா என்பது குறித்து ஆய்வு செய்து அதன் அறிக்கையினை ஆணையத்தில் 17/07/2025 அன்று ஆணையத்தில் நேரடியாக ஆஜராகி சமர்ப்பிக்க வேண்டுமென்று ஆணையம் உத்தரவு பிறப்பிக்கின்றது.

5. இனம்-3-ஐப் பொறுத்த வரையில், கல் நடுவது குறித்து, பொதுத் தகவல் அலுவலர் தெரிவிக்கையில் வட்டாட்சியர், ஓசூர் வட்டம் அவர்கள், இதுவரை அறிக்கை சமர்ப்பிக்கவில்லை என்றார். எனவே, வட்டாட்சியர், ஓசூர் அவர்கள் மேற்குறிப்பிட்ட பொருண்மை குறித்த அறிக்கையோடு ஆணையத்தில் 17/07/2025 அன்று நேரடியாக ஆஜராகி சமர்ப்பிக்க வேண்டுமென்று ஆணையம் உத்தரவிடுகிறது.

6. இனம்-4ஐப் பொறுத்த வரையில், மனுதாரர், தனக்கு வழங்கப்பட்ட தகவல் பொருத்தமற்றது எனத் தெரிவித்தார். தனது 11/02/2023 தேதியிட்ட மனுவின் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றார். எனவே, உதவி இயக்குநர், நில அளவை மற்றும் நில ஆவணங்கள் துறை, கிருஷ்ணகிரி அவர்கள் மனுதாரரின் 11/02/2023 தேதியிட்ட மனுவின் மீது நடத்தப்பட்ட விசாரணை அறிக்கையோடு 17/07/2025 அன்று ஆணையத்தில் நேரடியாக ஆஜராகி சமர்ப்பிக்க வேண்டுமென்று ஆணையம் உத்தரவிடுகிறது. ஆணையத்தின் விசாரணை 17/07/2025 அன்று காணொளி காட்சி வாயிலாக நடைபெறும். அதற்கான அழைப்பாணை (1) மனுதாரர், (2) உதவி இயக்குநர், நில அளவை மற்றும் நில ஆவணங்கள் துறை, கிருஷ்ணகிரி, (3) வட்டாட்சியர், ஓசூர் வட்டம் ஆகியோருக்கு அனுப்பப்பட வேண்டும். இவ்வாணையுடன், 08/11/2024 தேதியிட்டு பொதுத் தகவல் அலுவலர் அளித்த பதிலின் நகலை வட்டாட்சியர், ஓசூர் அவர்களுக்கு இணைத்து அனுப்பப்படுகிறது. மேலும், இவ்வாணையுடன், 08/11/2024 தேதியிட்டு பொதுத் தகவல் அலுவலர் அளித்த பதிலின் நகல் மற்றும் 20/03/2023 தேதியிட்ட சுற்றறிக்கையின் நகல் ஆகியவை உதவி இயக்குநர், நில அளவை மற்றும் நில ஆவணங்கள் துறை, கிருஷ்ணகிரி அவர்களுக்கு இணைத்து அனுப்பப்படுகிறது.

**7. மனுதாரரின் புகார் மனுவைப் பொறுத்த வரையில், மனுதாரர் தாக்கல் செய்த இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான வழக்கு எண்.SA 10832/SCIC/2023 இன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. எனவே, புகார் மனு மீதான வழக்கின் விசாரணை முற்றாக்கம் செய்யப்படுகிறது.**

**ஒம்./-(முகம்மது ஷகீல் அ்ஃதர்)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண்கள். SA 10832/SCIC/2023 & CP 1811/SCIC/2023</u>**

**பெறுநர்**

**பொதுஅதிகார அமைப்பு**

1.பொதுத் தகவல் அலுவலர்/
கண்காணிப்பாளர்
மாவட்ட நில அளவை அலுவலகம்
கிருஷ்ணகிரி

2. உதவி இயக்குநர்,
நில அளவை மற்றும் நில ஆவணங்கள் துறை
கிருஷ்ணகிரி (இணைப்புடன்)

3. வட்டாட்சியர்
ஓசூர் வட்டாட்சியர் அலுவலகம்
கிருஷ்ணகிரி மாவட்டம். (இணைப்புடன்)

**மேல்முறையீட்டாளர்**

THIRU SURESH REDDY
NO.132/4, DHASARAPALLI VILLAGE
POONAPALLI PANCHAYAT
HOSUR TALUK, KRISHNAGIRI-635 114

RG/PC